*பிரஸார் பாரதி*
*அகில இந்திய வானொலி-சென்னை-4*
*28 07 2025 MONDAY   12 40 PM*
*ஆகாஷ்வாணி - செய்திகள்*

***தலைப்புச் செய்திகள்***

1. நாடாளுமன்றத்தின் இருஅவைகளும் எதிர்க்கட்சிகளின் அமளி காரணமாக இன்று பிற்பகல் வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

2. Hepatitis பாதிப்பிலிருந்து மக்களை பாதுகாக்க மத்திய அரசு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் ஜெ.பி. நட்டா தெரிவித்துள்ளார்

3. நாட்டு மக்களின் தேவைகளில் இஸ்ரோ கவனம் செலுத்தி வருவதாக அதன் தலைவர் டாக்டர். வி. நாராயணன் கூறியுள்ளார்

4. உத்தரபிரதேச மாநிலம், பாராபங்கி மகாதேவ் கோவிலில் இன்று காலை நேரிட்ட விபத்தில் 2 பேர் உயிரிழந்தனர், 17 பேர் காயமடைந்தனர்.

5. தாய்லாந்து – கம்போடியா இடையே எல்லைப்புற விவகாரம் தொர்பான பேச்சுவார்த்தை மலேசியாவில் இன்று நடைபெறுகிறது.

>>>>><<<<<

எதிர்க்கட்சிகளின் அமளி காரணமாக, நாடாளுமன்றத்தின் இருஅவைகளும் பிற்பகல் வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

மக்களவை இன்று காலை 11 மணிக்கு கூடியபோது, கேள்வி நேரம் தொடங்குவதாக அவைத்தலைவர் திரு. ஓம் பிர்லா தெரிவித்தார்.

அப்போது, பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தத்தை திரும்பப் பெறுவது உள்ளிட்ட சில பிரச்சினைகளை எழுப்பி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கோஷமிட தொடங்கினர்.

அதையடுத்து. கேள்வி நேரத்தை நடத்த ஒத்துழைக்குமாறு எதிர்க்கட்சி உறுப்பினர்களிடம் திரு. ஓம் பிர்லா தெரிவித்தார்.

அமளிக்கு நடுவே, மத்திய நீர்வளத்துறை அமைச்சர் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத், பசுமை விழப்புணர்வு தொடர்பான கேள்வி ஒன்றுக்கு பதிலளித்தார்.

*அதன்பிறகும் எதிர்க்கட்சியினர் தொடர்ந்து கோஷமிட்டதால், அவை நண்பகல் 12 மணிவரை ஒத்தி வைக்கப்பட்டது.*

*மீண்டும் அவை கூடியபோது, எதிர்க்கட்சிகள் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டதை அடுத்து, பிற்பகல் 1 மணிவரை அவை ஒத்தி வைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.*

*மாநிலங்களவை இன்று காலை 11 மணிக்கு கூடியபோது, அஇஅதிமுகவைச் சேர்ந்த திரு. எம். தனபால், திரு. ஐ.எஸ். இன்பதுரை இருவரும் புதிய உறுப்பினர்களாக பதவிப்பிரமாணம் எடுத்துக் கொண்டனர்.*

*இதையடுத்து, பல்வேறு விவாதங்கள் தொடர்பாக 26 ஒத்திவைப்பு தீர்மானங்கள், எதிர்க்கட்சி உறுப்பினர்களிடமிருந்து பெறப்பட்டிருப்பதாகவும், அவை நிராகரிக்கப்படுவதாவும் மாநிலங்களவை துணைத்தலைவர் திரு. ஹரிவன்ஸ் தெரிவித்தார்.*

*இதையடுத்து, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டதால், மாநிலங்களவை நண்பகல் 12 மணிவரை ஒத்தி வைக்கப்பட்டது.*

*மீண்டும் அவை கூடியபோது, எதிர்க்கட்சி உறுப்பினர்களின் அமளி தொடர்ந்ததால். பிற்பகல் 2 மணிவரை அவை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.*

*>>>>><<<<<*

*உலக Hepatitis தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.*

*இந்நாளையொட்டி, மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா வெளியிட்டுள்ள சமூகவலைதளப் செய்தியில், இந்த பாதிப்பிலிருந்து மக்களை பாதுகாக்க மத்திய அரசு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக குறிப்பிட்டுள்ளார்.*

*இதுதொடர்பாக மத்திய இணையமைச்சர் திரு. பிரதாப் ராவ் ஜாதவ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், ஹெபடைடிஸ் தொடர்பான விழப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்த இந்த தினம் உதவுவதாக தெரிவித்துள்ளார்.*

*ஹெபடைடிஸ் பாதிப்பை உரிய காலத்தில் கண்டறிந்து சிகிச்சை அளிப்பதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு தீவிரமாக மேற்கொண்டு வருவதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.*

*>>>>><<<<<*

*உலக இயற்கை பாதுகாப்பு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.*

இயற்கை வளங்கள் மற்றும் சுற்றுச்சூழலை காப்பதன் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் இந்த தினம் அனுசரிக்கப்படுகிறது.

இதுதொடர்பாக, மத்திய வேளாண் துறை அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், மனித வாழ்வின் அடிப்படையாக இயற்கை விளங்குவதாக தெரிவித்துள்ளார்.

கடவுள் நமக்கு தந்த விலைமதிப்பற்ற பரிசான இயற்கையை காப்பதற்கான முழுமையான பங்களிப்பை வழங்க அனைவரும் இந்நாளில் உறுதியேற்க வேண்டுமென்று அமைச்சர் கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>><<<<<

நாட்டு மக்களின் தேவைகளில் இஸ்ரோ கவனம் செலுத்தி வருவதாக அதன் தலைவர் டாக்டர். வி. நாராயணன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், நாசா மற்றும் இஸ்ரோ இணைந்து உருவாக்கிய புவி கண்காணிப்புக்கான *Nisar* செயற்கைக்கோள் வரும் *30*ஆம் தேதி *GSLV-F16* ராக்கெட் மூலம் ஸ்ரீஹரிகோட்டாவிலிருந்து விண்ணில் ஏவப்படவுள்ளதாக கூறினார்.

மேகமூட்டம் மற்றும் மழைக்காலங்களின் போது, இந்த செயற்கைக்கோள் புவி கண்காணிப்பில் ஈடுபடும் என்றும் இதன்மூலமாக நிலச்சரிவுகள் உள்ளிட்ட பேரிடர்களை கண்டறிவதிலும், வானிலை மாற்றங்களை கண்காணிப்பதிலும் முன்னேற்றம் காணப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஆதித்யா எல்.*1* செயற்கைக்கோளானது சூரிய ஆய்வு தரவுகளை அனுப்பத் தொடங்கியுள்ளதாகவும் டாக்டர் வி. நாராயணன் கூறினார்.

>>>>><<<<<

*SARS-CoVid-2* தொற்று பாதிப்பிலிருந்து *25* லட்சத்திற்கும் அதிகமானோரின் உயிர்களை கோவிட் தடுப்பு மருந்துகள் காப்பாற்றியுள்ளதாக இத்தாலியில் நடத்தப்பட்ட ஆய்வில் தெரியவந்துள்ளது.

*அங்குள்ள கல்வி நிறுவனம் ஒன்று நடத்திய ஆய்வில், நோய் தொற்றுவதற்கு முன்பாக தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்களில், 82 சதவீதம் பேர் காப்பாற்றப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.*

*இவர்களில் 90 சதவீதம் பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் என்றும் அந்த ஆய்வில் கூறப்பட்டுள்ளது.*

*>>>>><<<<<*

*உத்தரபிரதேச மாநிலம், பாராபங்கி மகாதேவ் கோவிலில் இன்று காலை நேரிட்ட விபத்தில் 2 பேர் உயிரிழந்தனர், 17 பேர் காயமடைந்தனர்.*

*அப்பகுதியில் மின்கம்பி அறுந்து விழுந்ததால் நேரிட்ட கூட்ட நெரிசலில் பக்தர்கள் சிக்கி, இந்த விபத்து ஏற்பட்டதாக காவல்துறையின் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.*

*விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு இரங்கல் தெரிவித்துள்ள அம்மாநில முதலமைச்சர் யோகி ஆதித்யநாத், அக்குடும்பத்தினருக்கு தலா 5 லட்சம் ரூபாய் வழங்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.*

*காயமடைந்தவர்களுக்கு உரிய சிகிச்சைகள் அளிக்கப்படுவதை உறுதிப்படுத்துமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.*

*>>>>><<<<<*

*தாய்லாந்து – கம்போடியா இடையே எல்லைப்புற விவகாரம் தொர்பான பேச்சுவார்த்தை மலேசியாவில் இன்று நடைபெறுகிறது.*

*தாய்லாந்தின் இடைக்கால பிரதமர் திரு. Phumtham Wechayachai மற்றும் கம்போடிய பிரதமர் திரு. Hun Manet இருவரும் இதில் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.*

*இதற்கிடையே, இருநாடுகளுக்கும் இடையே நான்காவது நாளாக மோதல் தொடர்ந்து வரும் நிலையில், இதில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 32 ஆக உயர்ந்துள்ளது. 130க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.*

*இருநாடுகளுக்கும் இடையேயான போர் தொடரும் பட்சத்தில், அந்நாடுகளுடனான வர்த்தக ஒப்பந்தங்களை ரத்து செய்ய நேரிடும் என்று அமெரிக்க அதிபர் திரு. டொனால்டு ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.*

*>>>>><<<<<*

***தமிழகத்தின் விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிப்புத்தூர் ஆண்டாள் கோவிலில் ஆடிப்பூரத்தை ஒட்டி, இன்று தேரோட்டம் நடைபெற்றது.***

***இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.***

***(வாய்ஸ் பைட் – கமலக்கண்ணன் 38 செகண்ட்ஸ்)***

*>>>>><<<<<*

கிழக்கு ராஜஸ்தானின் ஒருசில பகுதிகளில், இன்று வழக்கத்திற்கு மாறாக அதிக அளவில் கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நாளை முதல் 31ஆம் தேதிவரை அதிகனமழை பெய்யக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடகிழக்கு மாநிலங்களின் ஒரு சில பகுதிகளில் அடுத்த மாதம் ஒன்றாம் தேதி முதல் மூன்றாம் தேதி வரை. கனமழை முதல் அதிகனமழை வரை பெய்யக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

கேரளா, மாஹே மற்றும் கர்நாடகாவின் தெற்கு உட்புற மாவட்டங்களில் இன்று முதல் வரும் 30ஆம் தேதிவரை ஒரு சில பகுதிகளில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக அந்த மையம் தெரிவித்துள்ளது.

*>>>>><<<<<*

***தமிழகத்தில், மேட்டூர் அணையிலிருந்து திறந்துவிடப்படும் நீரின் அளவு ஒரு லட்சம் கனஅடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.***

***இதனால், 11 மாவட்டங்களில் காவிரி கரையோரம் வசிக்கும் மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.***

***(சவுண்ட் பைட் – விஜயகுமார் 46 செகண்ட்ஸ்)***

*>>>>><<<<<*

***இஸ்ரேல் நாட்டுக்குச் செல்லும் வெளிநாட்டு வர்த்தக கப்பல்கள் மீது, தாக்குதல் நடத்தப்படும் என்று ஏமனைச் சேர்ந்த ஹவுதி அமைப்பு எச்சரித்துள்ளது.***

***இதுதொடர்பாக, அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில், இஸ்ரேல் நாட்டுடன் கொண்டுள்ள வணிக தொடர்பை, வெளிநாட்டு நிறுவனங்கள் துண்டிக்க வேண்டும் என்றும்,***

***காஸா மீதான இஸ்ரேலின் போரை கைவிட, சம்பந்தப்பட்ட நாடுகள் வலியுறுத்த வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.***

***கடந்த மாதம் செங்கடலில் இரண்டு கப்பல்கள் கடலில் மூழ்கடிக்கப்பட்டதற்கு ஹவுதி அமைப்பு பொறுப்பேற்றது குறிப்பிடத்தக்கது.***

*>>>>><<<<<*

***இங்கிலாந்துக்கு எதிரான 5வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டிக்கான இந்திய அணியிலிருந்து காயம் காரணமாக ரிஷப் பண்ட் விலகியதை அடுத்து, தமிழக வீரர் நாராயண் ஜெகதீசன் சேர்க்கப்பட்டுள்ளார்.***

------------

ஜார்ஜியாவில் நடைபெற்று வரும் உலகக்கோப்பை மகளிர் செஸ் போட்டியின் இறுதியாட்டத்தில் இந்தியாவின் கொனேரு ஹம்பி – திவ்யா தேஷ்முக் இடையிலான டை-பிரேக்கர் சுற்று இன்று நடைபெற உள்ளது.

*>>>>><<<<<*